பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

10 06 2025 6 45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அமெரிக்காவின் நாசா மற்றும் ஸ்பேஸ்-எக்ஸ் விண்வெளி நிறுவனம் இணைந்து இன்று மேற்கொள்விருந்த **Axiom-4** விண்வெளிப் பயணம் நாளைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் தெரிவித்துள்ளார்.

2. ஜம்மு-கஷ்மீர் எல்லைப் பகுதியில், குண்டுவீச்சில் சேதமடைந்த வீடுகளுக்கு கூடுதல் நிவாரணம் வழங்குவதற்காக 25 கோடி ரூபாயை உள்துறை அமைச்சகம் ஒதுக்கீடு செய்துள்ளது.

3. மாணவ-மாணவிகளின் உயர்கல்வியை ஊக்குவிக்கும் வகையில் மாநில அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்திலிருந்து, மாநிலங்களவைக்கு ஆறு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்புமனுக்கள் பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

5. ஐ.சி.சியின் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர்கள் பட்டியலில் இந்திய அணியின் முன்னாள் கேப்டன் மகேந்திரசிங் தோனி இடம்பெற்றுள்ளார்.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

அமெரிக்காவின் நாசா மற்றும் ஸ்பேஸ்-எக்ஸ் விண்வெளி நிறுவனம் இணைந்து இன்று மேற்கொள்விருந்த **Axiom-4** விண்வெளிப் பயணம் நாளை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சமூக வலைதளத்தில் இதனைப் பதிவிட்டுள்ள இஸ்ரோ தலைவர் திரு. வி. நாராயணன், மோசமான வானிலையால் இந்த பயண திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இந்தியாவின் சுபான்ஷு சுக்லா மற்றும் அமெரிக்கா, போலந்து, ஹங்கேரி நாடுகளைச் சேர்ந்த 4 வீரர்கள் இந்த விண்வெளிப் பயணத்தை இன்று மாலை மேற்கொள்ள இருந்தனர்.

இவர்கள் 14 நாட்கள் சர்வதேச விண்வெளி மையத்தில் தங்கியிருந்து புவி சுற்றுவட்டப் பாதை தொடர்பான ஆய்வை மேற்கொள்ள உள்ளனர்.

இந்த விண்வெளிப் பயணம் மூலம் ராகேஷ் ஷர்மாவிற்குப் பிறகு விண்வெளி ஆய்வு மையத்திற்கு செல்லும் இரண்டாவது இந்தியர் என்ற பெருமையை சுபான்ஷு சுக்லா பெறுகிறார்.

<<<<>>>>

தேசிய முதலீடு மற்றும் கட்டமைப்பு நிதியத்தின் 6வது நிர்வாகக் குழுக் கூட்டம் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் நேற்று புதுதில்லியில் நடைபெற்றது.

இந்த நிதியத்தின் செயல்பாடு மற்றும் வழிகாட்டுதல்களுக்கு கூட்டத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

தேசிய முதலீடு மற்றும் கட்டமைப்பு நிதியத்தின் எதிர்கால திட்டம் குறித்தும், அவற்றை முன்னெடுத்துச் செல்வது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

முதலீடுகளை அதிகரிப்பதற்கான புதிய வழிமுறைகள் மற்றும் அடுத்த தலைமுறையினருக்கான நிதியை திரட்டுதல் உள்ளிட்டவை குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<>>>

ஜம்மு-கஷ்மீர் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் குண்டுவீச்சில் சேதமடைந்த வீடுகளுக்கு கூடுதல் நிவாரணம் வழங்குவதற்காக 25 கோடி ரூபாயை உள்துறை அமைச்சகம் ஒதுக்கீடு செய்துள்ளது.

எல்லையோர மாவட்டங்களில் சேதமடைந்த வீடுகளுக்கு கூடுதல் இழப்பீடு வழங்கப்படும் என பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்ததைத் தொடர்ந்து 2 ஆயிரத்து 60 வீடுகளுக்கு நிவாரணத் தொகை வழங்க இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று உள்துறை அமைச்சக அறிக்கை தெரிவிக்கிறது.

முழுவதுமாக சேதமடைந்த வீடுகளுக்கு தலா 2 லட்சம் ரூபாயும், பகுதியளவு சேதமடைந்த வீடுகளுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும் வழங்கப்படும் என்று பிரதமர் அறிவித்திருந்தார்.

இதேபோல் பஞ்சாப் மாநில எல்லையில் சேதமடைந்த வீடுகளுக்கும் கூடுதல் நிவாரணத் தொகை வழங்கப்படும் என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<>>>

திருக்குறளில் இடம்பெற்றுள்ள கல்வி குறித்த கருத்துகளின் அடிப்படையிலேயே தேசிய கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டிருப்பதாக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஆங்கிலேயர்கள் விட்டுச் சென்ற அதே கல்வி முறையை மாற்றி, மாணவர்களுக்குத் தேவையான அறிவை வழங்கும் நோக்கிலேயே தேசிய கல்விக்கொள்கை உருவாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு வாழ்ந்தவர் திருவள்ளுவர் என்றும், அவருடைய கருத்துகள் மிகவும் ஆழமானவை என்றும் திரு. ஆர்.என். ரவி தெரிவித்தார்.

<<<>>>

குழந்தைகள் பள்ளிக்கு வர ஏதுவாக காலை உணவுத் திட்டம், உயர்கல்வி தடைபடாமல் இருக்க மாணவ-மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் என தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் திமுக சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கி அவர் பேசினார்.

மாநில அரசின் மக்கள் நலத்திட்டங்களால் திமுக தொடர்ந்து அனைத்து தேர்தல்களிலும் வெற்றி பெற்று வருவதாகவும் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்திலிருந்து, மாநிலங்களவைக்கு ஆறு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்புமனுக்கள் பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

மனுக்களை விலக்கிக்கொள்ள வரும் 12-ஆம் தேதி கடைசி நாளாகும்.

திமுக சார்பில் 4 பேரும், அஇஅதிமுக சார்பில் 2 பேரும் மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கு மனுதாக்கல் செய்துள்ளதால் அவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதன்படி, திமுக சார்பில் திரு வில்சன், திரு சிவலிங்கம், திருமதி சல்மா ஆகியோரும், அதன் கூட்டணி கட்சியான மக்கள் நீதி மய்யம் சார்பில் திரு கமலஹாசனும், அஇஅதிமுக சார்பில் திரு இன்பதுரை, திரு தனபால் ஆகியோரும் மனுதாக்கல் செய்துள்ளனர்.

<<<<>>>>

நாடு முழுவதும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண் வளர்ச்சி இயக்க பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மத்திய அரசு விவசாயிகளுக்காக செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து இதில் விளக்கம் அளிக்கப்படுகிறது.

இந்த பிரச்சார இயக்கத்தின் ஒரு பகுதியாக தருமபுரி மாவட்டம் இருமத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி வெண்ணிலா, விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

**(Voice byte – Vennila – 24 sec)**

இந்த முகாம் தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**(Voice byte – Farmer – 40 sec)**

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

இஸ்தான்புல் நகரில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை தொடர்ந்து யுக்ரைனும் - ரஷ்யாவும் சிறைக் கைதிகளை பரஸ்பரம் ஒப்படைக்கும் நிகழ்வு தொடங்கியுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

----------

தலைநகர் தில்லியில் **Wazirpur, New Sabzi Mandi** பகுதிகளில் சட்டவிரோதமாக தங்கியிருந்த பங்களாதேஷை சேர்ந்த 66 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

----------

மும்பையில் ரயில் படிக்கட்டில் பயணம் செய்த 5 பேர் தவறி விழுந்து உயிரிழந்ததைத் தொடர்ந்து புதிதாக தயாரிக்கப்படும் புறநகர் ரயில் பெட்டிகளில் தானியங்கி கதவுகளைப் பொருத்த ரயில்வே துறை முடிவு செய்துள்ளது.

----------

லைபீரிய நாட்டு சரக்குக் கப்பல் விழிஞ்ஞம் துறைமுகத்தில் மூழ்கியதைத் தொடர்ந்து, தனுஷ்கோடி கடற்கரைப் பகுதியில் பிளாஸ்டிக் மூலப்பொருட்கள் கரை ஒதுங்குவதால் அவற்றுக்கு அருகில் மக்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

----------

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சுப்பிரமணிய சுவாமிக்கு வைகாசி விசாக திருவிழாவை ஒட்டி புஷ்பாஞ்சலி விமரிசையாக நடைபெற்றது.

----------

அரக்கோணத்தில் உள்ள விமானப் படை பயிற்சி மையத்தில் கடற்படை அதிகாரிகள் 18 பேர் ஹெலிகாப்டர் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர்.

----------

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் கூட்டம் வருவாய் அலுவலர் திரு. நாராயணன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

----------

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே திருமண மண்டபத்தில் தங்க நகை மற்றும் ரொக்கப் பணத்தை திருடிய தந்தை, மகனை காவல்துறையினர் கைது செய்தனர்.

----------

ராணிப்பேடடை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டிக்கான கட்டுப்பாட்டு அறையை ஆட்சியர் திருமதி சந்திரகலா தொடங்கி வைத்தார்.

----------

திரையரங்குகளில் அதிக கட்டணம் வசூலித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநில அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

----------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.சி.சியின் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர்கள் பட்டியலில் இந்திய அணியின் முன்னாள் கேப்டன் மகேந்திரசிங் தோனி இடம்பெற்றுள்ளார்.

நெருக்கடியான தருணத்திலும் பதற்றமின்றி அணியை வழிநடத்தி வெற்றிக்கு கொண்டு செல்லும் தோனியின் திறமையைப் பாராட்டும் வகையில் அவர் ஐ.சி.சி. கௌரவ வீரர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தோனியுடன் ஆஸ்திரேலியாவின் மேத்யூ ஹைடன், தென்னாப்பிரிக்காவின் ஹஷிம் ஆம்லா உள்ளிட்ட 7 வீரர்கள் ஐ.சி.சி. கௌரவ வீரர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

-------------

ஆசியக் கோப்பை கால்பந்து தகுதிச் சுற்று இறுதியாட்டத்தில் இந்தியா இன்று ஹாங்காங்கை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மாலை மணி 5.30க்கு தொடங்குகிறது.

நான்கு அணிகள் கொண்ட குரூப்-சி பிரிவில் முன்னணியில் உள்ள இந்தியாவும் - ஹாங்காங்கும் இறுதிச்சுற்றுக்கு முன்னேறின.

-------------

இந்தியா – பெல்ஜியம் அணிகளுக்கு இடையேயான இரண்டாவது மகளிர் ஜூனியர் ஹாக்கிப் போட்டி இன்று நடைபெறுகிறது.

**Antwerp**–ல் இப்போட்டி இரவு 9 மணிக்கு நடைபெறுகிறது.

-------------

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சின்மயா தேவ் - இத்தாலியின் **Alberto Morolli** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--------------

ப்ரோ லீக் ஹாக்கிப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா – நெதர்லாந்திடம் 2-3 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது.

**<<<<The End>>>>**